# தமிழகத்தில் நகர எரிவாயு விநியோக உள்கட்டமைப்பை உருவாக்க AG&P தமிழக அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) மேற்கொண்டுள்ளது

*மாண்புமிகு முதலமைச்சர், உயர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், ராமேஸ்வரத்தில் AG&Pன் குழாய் மூலம் வழங்கும் இயற்கை எரிவாயு (PNG) திட்டத்தைத் துவக்கிவைத்தார் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் AG&P தொடங்கியுள்ள மாநிலத்தின் முதல் சிட்டி கேட் ஸ்டேஷன் மற்றும் CNG மதர் ஸ்டேஷன்-ஐ நாட்டிற்கு அர்பணித்தார்*

- *தமிழ்நாட்டில் சுத்தமான மற்றும் மலிவான இயற்கை எரிவாயு தொடர்ந்து அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதற்காக அடுத்த 8 ஆண்டுகளில் AG&P ரூ.2,700 கோடியை முதலீடு செய்யவுள்ளது.*
- *இம்முதலீடு 7,000 நேரடி மற்றும் மறைமுக உள்ளூர் வேலைகளை உருவாக்கும்*

***16 பிப்ரவரி 2021**: உலகளாவிய டவுன்ஸ்ட்ரீம் கேஸ் மற்றும் LNG லாஜிஸ்டிக்ஸ் நிறுவனமான அட்லாண்டிக், கல்ஃப்&பசிஃபிக் கம்பெனி (AG&P) மற்றும் தமிழக அரசு இடையே, நகர எரிவாயு விநியோக (CGD) நெட்வொர்க்குகளை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் படி, தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் நம்பகமான, சிக்கனமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு நட்பார்ந்த இயற்கை எரிவாயு வழங்கப்படவுள்ளது. இப்புதிய, உலகத் தரம் வாய்ந்த CGD உள்கட்டமைப்பு இந்தியாவில் AG&P இன் CGD பிராண்டு - AG&P Prathamன் கீழ் உருவாக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் உயர்திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் கலந்துகொண்டு இந்த விழாவைச் சிறப்பித்தார் மற்றும் ராமேஸ்வரத்தில் AG&Pஇன் PNG திட்டத்தை அறிமுகப்படுத்தினார். மேலும் அவர், சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட, மாநிலத்தின் முதல் சிட்டி கேட் ஸ்டேஷன் மற்றும் CNG முதன்மை மையத்தை நாட்டிற்கு அர்பணித்தார்.*

*இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் CGD நெட்வொர்க்குகளை உருவாக்க AG&P அடுத்த எட்டு ஆண்டுகளில் 2,700 கோடி ரூபாயை முதலீடு செய்யும். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட CGD உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவை வழங்க தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. இதன் மூலம், வீடுகள், வணிகங்கள் மற்றும் தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு தடையில்லா PNG விநியோகத்தை வழங்க இயலும் மற்றும் கம்பிரஸ்டு நேச்சுரல் கேஸ் (CNG) மையங்கள் மூலம் வாகனங்களுக்கான CNG-ஐ 24 மணிநேரமும் வழங்கும்.*

*ராமேஸ்வரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள AG&P Prathamன் PNG முன்முயற்சி, இராமநாதபுரத்தில் உள்ள அதன் இயற்கை எரிவாயு விநியோக நிலையம் (Mother Station) மற்றும் CNG மையங்கள் ஆகியவை, மாநிலத்தின் நகர எரிவாயு உள்கட்டமைப்பின் வளர்ச்சியை முன்னெடுக்கும். இது, அதிகளவில் மக்கள் அறிவார்ந்த மற்றும் தூய்மையான எரிபொருட்களுக்கு மாறுகையில், சமூகப்-பொருளாதார வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும்.*

*"மாநிலத்தில் நகர எரிவாயு உள்கட்டமைப்பை உருவாக்க தமிழக அரசுடன் கூட்டாண்மை மேற்கொண்டுள்ளதில் நாங்கள் பெருமைப்படுகிறோம், இது இம்மாநிலத்தை உண்மையிலேயே சுயசார்பு கொண்டதாக மாற்றும். நாங்கள் எரிசக்திப் புரட்சியில் முன்னிலையில் இருக்கிறோம். இந்தியாவின் மிகவும் ஆற்றல் வாய்ந்த பிராந்தியங்களில் ஒன்றாக, CGD துறையில் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கங்களுக்கு தமிழகத்தில் மிகப்பெரிய வாய்ப்புகள் உள்ளன. அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உள்கட்டமைப்பு மீதான தொடர் கவனம் மூலம், தமிழகத்தின் பிராந்திய மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கு நம்பகமான, 24/7 இயற்கை எரிவாயு அணுகல் மற்றும் அதனால் கிடைக்கப்பெறும் அனைத்து ஆரோக்கியம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த நன்மைகளையும் வழங்குகிறோம். மேலும், காரைக்காலில் உள்ள AG&P'இன் LNG இறக்குமதி முனையம் ("KLNG"), செயல்திட்ட ரீதியாக சென்னையிலிருந்து 280 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மற்றும் தமிழகத்தின் வளர்ந்து வரும் உற்பத்தி கிளஸ்டர்களுக்கு அருகாமையில் உள்ளது, இது தமிழகத்தை எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரமாக மாற்றுவதற்கு முக்கிய பங்களிப்பினை வழங்குவதாக இருக்கும். காரைக்காலின் 300 கி.மீ சுற்றளவில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கும், தொழில்துறை மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கும் இயற்கை எரிவாயுக்கான அணுகலை வழங்குவதோடு மட்டுமல்லாமல், KLNG AG&P Pratham மற்றும் பிற CGD நிறுவனங்களால் இயக்கப்படும் பிராந்தியத்தின் CGD நெட்வொர்க்குகளுக்கு நிலையான, சிறந்த விலையுள்ள இயற்கை எரிவாயு விநியோகத்திற்கான உத்தரவாதத்தையும் அளிக்கும்" என்று கூறினார், **AG&P நகர எரிவாயு விநியோகப் பிரிவின் நிர்வாக இயக்குநர் PPG சர்மா** அவர்கள்.*

*2018 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் 12 மாவட்டங்களுக்கு CGD நெட்வொர்க்குகளின் மேம்பாட்டிற்காக பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) உரிமம் வழங்கியது. இவற்றில், AG&P 13751 சதுர கிமீ பரப்பளவில் ஆறு மாவட்டங்களைக் கைப்பற்றியது, இம்மாவட்டங்கள், நிறுவனம் பதித்துவரும் 12,000 கிமீ நீள குழாய்களின் வழியாக இயற்கை எரிவாயுவிற்கான இணைப்பைப் பெறுவார்கள். உரிமங்களின் கீழ், AG&P இயற்கை எரிவாயுவை எட்டு ஆண்டுகளுக்கு பிரத்தியேகமாக விற்பனை செய்யும் மற்றும் அதன் CGD வசதிகளை 25 ஆண்டுகளுக்கு பிரத்தியேகமாக இயக்கும். 2028 ஆம் ஆண்டளவில், AG&P 20 லட்சம் வீடுகள், 10,000 வணிக நிறுவனங்கள், SIPCOT, SIDCO மற்றும் மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி போன்ற 150 தொழில்துறை நிறுவனங்களுக்கு PNGயை வழங்கும், மேலும் மாநிலம் முழுவதும் 200 க்கும் மேற்பட்ட CNG நிலையங்களை இயக்கும்.*




*ரூ.2,700 கோடி முதலீட்டில், 7,000 நேரடி மற்றும் மறைமுக பணி வாய்ப்புகளை உருவாக்கவுள்ள AG&P Pratham'ன் CGD நெட்வொர்க்குகளின் மேம்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உயர்திரு.எடப்பாடி K. பழனிசாமி மற்றும் AG&Pஇன் நகர எரிவாயு விநியோகப்பிரிவின் நிர்வாக இயக்குனர் திரு.PPG சர்மா.*

*அத்துடன் AG&P – ன் கார்ப்பரேட் வீடியோவிற்கான இணைப்பு இங்கே - இணைப்பை பதிவிறக்கம் செய்க - [AGP Pratham Tamilnadu CorpVideo]*

# முடிவுற்றது #

***AG&P குறித்து:***

*LNG மற்றும் எரிவாயு லாஜிஸ்டிக் மற்றும் விநியோக தீர்வுகளை உருவாக்கி இயக்கும் ஒரு உலகளாவிய முன்னோடியாகும். புதிய மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளில் இயற்கை எரிவாயுவை பாதுகாப்பாகவும் எளிதாகவும் அணுகுவதற்கான உள்கட்டமைப்பை AG&P வழங்குகிறது. பொறியியல், கொள்முதல், திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமானத்தை உள்ளடக்கி, விநியோகஸ்தர்கள் மற்றும் டவுண்ஸ்ட்ரீம் வாடிக்கையாளர்களுக்கு ஆன்ஷோர் மற்றும் ஆஃப்ஷோர் எரிவாயு உள்கட்டமைப்பிற்கான உரிமையாளராகவும் மற்றும் சேவை வழங்குநராகவும் நாங்கள் செயலாற்றுகிறோம்.*
*www.agpglobal.com*

***AG&P பிரதம் குறித்து:***

*இந்தியாவின் AG&P பிரதம், சிங்கப்பூரைச் சேர்ந்த AG&P குழுமத்தின் நகர எரிவாயு விநியோகப் (CGD) பிரிவு ஆகும், இது ஒரு முன்னணி டவுன்ஸ்ட்ரீம் கேஸ் மற்றும் LNG லாஜிஸ்டிக்ஸ் நிறுவனமாகும். LNG மற்றும் இயற்கை எரிவாயுவை எங்கள் முனையங்களில் இருந்து மின்சாரம், தொழில்துறை, வணிக, உள்நாட்டு மற்றும் போக்குவரத்து துறைகளில் செயலாற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்.*
*ராஜஸ்தான், ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள 31 மாவட்டங்களில் அன்றாட பயன்பாட்டிற்கு பிரத்யேகமாக இயற்கை எரிவாயுவை வழங்குவதற்காக பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) வழங்கிய 12 நகர எரிவாயு வினியோக (CGD) உரிமங்களை AG&P வைத்திருக்கிறது. இந்த பிரத்யேக உரிமைகள் வீடுகள், தொழில்துறை, வணிகங்கள், வணிகரீதியான மற்றும் வணிகம்-சாராத விலக்கு, வணிக (NDEC) நிறுவனங்கள் மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் CNG ஆகியவைகளுக்குப் பொருந்தும். இந்த  CGD நெட்வொர்க்குகள், 278,000 சதுர கிலோமீட்டர் அளவிற்கு, 17,000 அங்குல-கிமீ குழாய் இணைப்புகள் மற்றும் 1,500 க்கும் மேற்பட்ட புதிய CNG மையங்கள் அடங்கிய நெட்வொர்க்கைக் கொண்டிருக்கும்*

*மேலும் அறிய, www.agppratham.comஐப் பார்வையிடலாம் மற்றும் AG&P Pratham இன் அதிகாரப்பூர்வ சமூக ஊடக பக்கங்களைப் பின்பற்றலாம்:*

*www.linkedin.com/company/ag-p-pratham/*
*www.facebook.com/agppratham/*
*www.instagram.com/agppratham/*

***ஊடகத் தொடர்புகள்:***
***MSL இந்தியா***
***சாக்ஷி கண்டெல்வால்*** *– முதுநிலைச் செயலாளர், sakshi.khandelwal@mslgroup.com*
*M: + 91 9999010802*